அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கழகம் வெளிநடப்பு !... முதல் பக்கத் தொடர்ச்சி

இயந்திரங்களுக்கு பதிலாக, பழையபடி வாக்குச்சீட்டு முறையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

வாக்குப்பதிவு இயந்திரங்களில் மற்றும் VVPAT செயல்பாடுகளில் முழுமையான வெளிப்படைத்தன்மை பேணப்படுவதோடு அனைத்துக் கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் தொழில் நுட்பச் செயல்முறைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இணைய வழியில் புதிதாக விண்ணப்பிக்கும் வாக்காளர்களின் முகவரி மற்றும் தகுதிகளை நேரடியாக சரிபார்ப்பு மூலம் ஆய்வு செய்வதற்கு அரசியல் கட்சிகளின் BLA 2 முகவர்களுக்கு மட்டுமன்றி BLO மற்றும் EROகளுக்கும் கூட போதிய அதிகாரமும், சரிபார்ப்பு வசதிகளும் தற்போது வழங்கப்படவில்லை.

குடிசைப்பகுதிகள், நடைபாதை மற்றும் நடைமேடைகளில் வாழ்பவர்கள், மலைவாழ் குடியிருப்புகள் உள்ளிட்ட ஒவ்வொரு குடும்பங்களுக்கும் வீடு வீடாக கணக்கெடுப்பு நடத்த வேண்டும்.

ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்டங்கள் (Public hearing) முறையாக அறவிக்கப்பட்டு விடுமுறை நாட்களில் BLO முன்னிலையில் காணொலிப் பதிவுடன் நடத்தப்பட வேண்டும்.

முன்னறிவிப்பும், விசாரணையுமின்றி எந்த வாக்காளரும் நீக்கப்படக் கூடாது.

"படிவம் 7" ஆட்சேபணைகள் அனைத்தும் பொதுவில் வெளியிடப்பட வேண்டும்.

அனைத்து மாநிலங்களிலும் தேர்தலுக்கு முன்பாக அவசரகதியில் நடத்தப்பட்டு, திட்டமிட்டு வாக்காளர்களை நீக்க வழிசெய்த S.I.R. முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டும். S.I.R.க்கு முந்தைய வாக்காளர் பட்டியலைக் கொண்டே இனி வரும் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். வாக்காளர் பட்டியல் திருத்தம் என்பது மக்களின் வாக்குரிமையை உறுதிசெய்வதற்கான நடைமுறையாக இருக்க வேண்டுமே தவிர, வாக்குரிமையைப் பறிக்கும் சதி ஆயுதமாக மாற்றப்படக் கூடாது. போதுமான கால அவகாசமும், வாய்ப்புகளும் தரப்பட்டே இனி அப்படிப்பட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

SIR மூலம் நீக்கப்பட்டவர்களின் வாக்குச் சாவடி வாரியான பட்டியலை நீக்கப்பட்ட தற்கான காரணங்களுடன் தமிழில், தேடக்கூடிய வடிவில் எப்போது வெளியிடப் போகிறீர்கள்?

படிவம் 6ல் இடம் பெற்றிருந்த SIR தொடர்பான உறுதிமொழி (Declaration) நிரந்தரமாக நீக்கப்பட்டுவிட்டதா?

SIR மூலம் "இடம் மாறியவர் அல்லது இல்லாதவர்" எனக் கூறி நீக்கப்பட்ட பல லட்சக்கணக்கான வாக்காளர்களில் எத்தனை பேர் வீடு வீடாகச் சென்று நேரடியாக (Door to Door Survey) மூலம் முறையாக சரிபார்க்கப்பட்டுள்ளனர்?

தகுதியுள்ள அனைத்து வாக்காளர்களும் விடுபடாமல் சேர்க்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் அறிவிக்கப்பட்டுள்ள காலக்கெடுவை அனைத்து கட்சியின் ஆலோசனைகளை பெற நீட்டிக்க வேண்டும்.

SIR மூலம் தகுதியான வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் முறையின்றி நீக்கப்பட்டுள்ளனர். இதற்கு முழுப் பொறுப்பேற்று இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையுடன் முன்னெடுக்கப்படும் அனைத்து ஜன நாயகப் போராட்டங்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் முழுமையான ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் கழகத்தின் கருத்து எடுத்துரைத்து வலியுறுத்தப்பட்டது.

ஜாதிப் பாகுபாட்டால்

பள்ளி மாணவர் தற்கொலையா! வெட்கித் தலைகுனிய வேண்டாமா?

உரிய நடவடிக்கை அவசியம்! கி.வீரமணி அறிக்கை!

சென்னை, அக். 24–

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

கோவை மாவட்டம், பீளமேடு பகுதியைச் சேர்ந்தவரும், கோவை, அவிநாசி சாலையில் உள்ள அரசு உதவி பெறும் கே.கே.நாயுடு மேல்நிலைப்பள்ளியில் பதினொன்றாம் வகுப்புப் படித்து வந்த மாணவரு மான 16 வயது அகிலன் அக்டோபர் 21 ஆம் தேதி தூக்கிட்டுத் தற் கொலை செய்து கொண்டார் என்ற செய்தி பேரதிர்ச்சிக்குரியதாகும். கல்வி கற்கும் இடத்தில், 'மாட்டுக்கறி சாப்பிடுவோர் யார்?' என்று கேள்வி எழுப்பி, அதன் மூலம் ஆசிரியரே பாகுபாட்டை உண்டாக்கும் கூழலை உருவாக்கியதாகச் சொல்லப்படுகிறதே, என்ன கொடுமை! இதை யொட்டி, மாணவர்கள் மத்தியில் எழுந்த உரையாடலும், தந்த மன உளைச்சலும் ஒரு மாணவரின் உயிரைப் பறித்திருக்கிறது என்றால், ஜாதியின் பெயரால் எத்தகைய கொடுமை இன்னும் இந்த நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது என்பது மனிதகுலத்துக்கே வெட்கமானது இல்லையா?

இன்னும் தீவிரப்படுத்தப்பட வேண்டும்!

இதற்கு உடந்தையாகவும், இதை மறைக்கும் வகையிலும் செயல்பட்டவர்கள் அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பள்ளி, கல்லூரி வளாகங்களில் ஜாதி உணர்வுடன் நடந்துகொள்ளும் ஆசிரியர்கள்



பற்றி அவ்வப்போது அறிகிறோம். அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றாலும், இன்னும் ஜாதிய மனநிலையில் இருந்து அவர்கள் விடுபடவில்லையென்றால், முதலில் பாடம் நடத்தப்பட வேண்டியது யாருக்கு? சமூகப் பார்வையோ, சிந்தனையோ இல்லாமல் ஜாதி, மத வெறியுடன் நடந்து கொள்வோர் மீது நடவடிக்கை எடுக்கும் முறைகள் இன்னும் தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

மாணவர்கள் மத்தியில் ஜாதி ஒழிப்புக் கருத்துகள், பெண்ணுரிமைக் கருத்துகள், சமத்துவக் கருத்துகள் பரப்பப்பட வேண்டும். வெறும் ஏட்டுச் சுரைக்காய் அவர்களை மனிதர்களாக்காது! இவற்றுக்கு வழிவகுக்காமல், இச் சமூகத்தை நம்மால் காக்க முடியாது. ஜாதி உள்ளிட்ட போதைகளை மாணவர்களிடமிருந்து ஒழிக்கும் பணி முதன்மையானது.

நீதி கிடைக்க வழி செய்யவேண்டும்!

உரிய உடனடி சட்டப்பூர்வ நடவடிக்கைகள் எடுப்பதில் அரசு ஒரு போதும் தாமதிக்கக் கூடாது. சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று போராடும் தோழர்கள் மீது நடவடிக்கைகளை எடுப்பதைத் தவிர்த்து, நீதி கிடைக்க வழி செய்யவேண்டும்.

அருமை மாணவச் செல்வம் அகிலனை இழந்து தவிக்கும் பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் நமது இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஜாதி ஒழிப்புப் பணியில் முன்னிலும் வேகமாய் ஈடுபடுவோம்!

ஜாதியால் பாகுபாடுகளுக்கு உள்ளானால், அந்த ஜாதியை மாய்க்கும் பணியில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமேயொழிய, தம்மை மாய்த்துக் கொள்ளக் கூடாது என்று மாணவச் செல்வங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

ஜாதிக்கு அடையாளம் உண்டா? ஆனால், ஜாதியை அடையாளப்படுத்துகிறார்கள்!

ஜாதி உணர்ச்சி வளர வளர, இன உணர்ச்சியையும், இனமான உணர்ச்சியையும் இழந்து, இன உரிமையைப் பறிகொடுக்கும் நிலை தான் ஏற்படும்!

எச்சரிக்கை! எச்சரிக்கை!

ஆற்றாத இந்தத் துயரைப் பாடமாக ஏற்று, ஜாதி ஒழிப்புப் பணியில் முன்னிலும் வேகமாய் ஈடுபடுவோம்.

கோவை மாவட்டக் கழகத் தோழர்கள் உரிய களப் பணியை மேற்கொள்வர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்ட முன்னாள் செயலாளர்

குன்னம் சி.இராஜேந்திரன் படத்திறப்பு!

முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு - ஆ.இராசா எம்.பி. - வீ.ஜெகதீசன் பங்கேற்பு!

பெரம்பலூர், அக், 24-

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. சார்பில், பெரம்பலூர் முன்னாள் மாவட்டக் கழகச்செயலாளர் மாவட்ட ஊராட்சி குழு முன்னாள் தலைவர் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரனின் திருஉருவப் படத் திறப்பு நிகழ்ச்சி முத்து கிருஷ்ணா திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னாள் அமைச்சர் கே.என். நேரு ,முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி., உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் கடந்த மாதம் 7ஆம் தேதி உடல் நலக்குறைவால் காலமானார். அவரது திருஉருவப்பட திறப்பு விழா நிகழ்ச்சி முத்துகிருஷ்ணா தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கழக முதன்மைச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளரும், மேனாள் ஒன்றிய அமைச்சருமான ஆ.இராசா.எம்.பி., ஆகியோர் கலந்து கொண்டு, மறைந்த குன்னம் சி.இராஜேந்திரன் உருவப் படத்தை திறந்து வைத்து, அவர் தி.மு.க. விற்காக செய்த அர்ப்பணிப்பு மற்றும் களப்பணிகள் குறித்தும், அவர் பொறுப்பில் இருந்த காலத்தில் தி.மு.க. சார்பில் நடத்தப்பட்ட பல்வேறு கட்ட போராட்டங்கள், கட்சியின் வளர்ச்சி குறித்தும் பேசினார்கள்.

பெரம்பலூர் தி.மு.க. முன்னாள் மாவட்ட செயலாளர், மாநில நிர்வாகி யாக இருந்த குன்னம் சி. ராஜேந்திரன் படத்திறப்பு விழா, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. தலைமையில், தி.மு.க. முதன்மைச் செயலாளர் கே.என். நேரு எம்.எல்.ஏ. நேற்று திறந்து வைத்தார். பெரம்பலூர் திமுக மாவட்ட பொறுப்பாளர் வீ.ஜெக தீசன் வரவேற்றார். குன்னம் ராஜேந்திரனின் குடும்பத்தினரான ரமேஷ், செந்தில்நாதன், வெற்றிவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் சி.வெ.கணேசன், திருச்சி மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், ந.ஜெகதீஷ்வரன், செ.அண்ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், டி.கே.ராமச்சந்திரன்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தமு தாழை பாஸ்கர், நூருல் ஹிதா இஸ்மாயில்,சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள்என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், செ.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், அழகு.நீலமேகம், மாவட்ட அரசு குற்றவியல் வழக்கறிஞர் ப.செந்தில்நாதன், தொ.மு.ச. மு.ராஜகாந்தம்,

வேப்பந்தட்டை ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் க.ராமலிங்கம், முன்னாள் துணை பெருந்தலைவர் எம்.ரெங்கராஜ், அரும்பாவூர் பேரூர் கழக செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன், பூலாம்பாடி பேரூர் கழக செயலாளர் செல்வலட்சுமி சேகர், லெப்பைக்குடிக்காடு பேரூர் கழகச் செயலாளர் ஜாகிர் உசேன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ)ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன்,

ஆர்.அருண், மா.பிரபாகரன், தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் பேரவை தலைவர் கே.கே.எம்.குமார், தொ.மு.ச. கவுன்சில் பேரவை மாவட்டச் செயலாளர் ஆர்.ரெங்கசாமி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் முத்தரசன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி(எ) அப்துல்பாரூக், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.வேணுகோபால், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு.தங்கராசு, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர்.முருகேசன், விவசாய கூலித் தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ.எம்.கே.கரிகாலன்,

மாவட்ட மகளிர் அணி விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ.கார்மேகம், தலைமை கழக பேச்சாளர்கள் எசனை ஆறுமுகம், மு.விஜயரத்தினம், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.இராசா, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், வழக்கறிஞர் கண்ணன் மற்றும் குன்னம் சி.இராஜேந்திரன் குடும்பத்தினர்களான மனைவி ரா.ராமதிலகம், மகன்கள், மருமகள்கள் ரா.செந்தில்நாதன், அமுதா, ரா.வெற்றிவேல் விஜயபிரியா, ரமேஷ் ராஜேந்திரன்சந்திரலேகா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஆசியன் பாரா விளையாட்டில் பேட்மின்டன் கலப்பு இரட்டையர் போட்டியில் இந்தியாவுக்கு வெண்கலம்!

தமிழ்நாட்டு வீராங்கனை தங்கை நித்யஸ்ரீ சிவனுக்கு பாராட்டுகள்!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை. அக்.24

தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

ஜப்பான் நாட்டில் நடைபெற்று வருகிற 5th Asian Para Gamesஇல் Badminton Mixed Doubles SH6 பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றுள்ள தங்கை நித்யஸ்ரீ சிவனுக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Women's Single SU5 பிரிவில், வெண்கலப் பதக்கம் வென்றதன் மூலம் தற்போதைய Asian Para Gamesல்



2ஆவது பதக்கத்தைப் பெற்றுள்ள தங்கை மனிஷா ராமதாஸுக்கும் என் பாராட்டுகள்.

தொடர்ந்து சர்வதேச அளவில் பல்வேறு பதக்கங்களைக் குவித்து இந்தியாவுக்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை தேடித்தரும் தங்கைகள் மனிஷா மற்றும் நித்யஸ்ரீ ஆகியோர் மென்மேலும் சாதனைகள் படைக்க என் அன்பும் வாழ்த்தும்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் - தொகுதி மறு சீரமைப்புக் கூட்டங்கள்!

கே.ஆர்.பெரியகருப்பன் - மு.தென்னவன் - தங்கப்பாண்டியன் - இளையராஜா பங்கேற்பு!

சிவகங்கை, அக். 24–

கழகத் தலைவர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் மாவட்டம் தோறும் கழகத்தை மறுசீரமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றது. இதற்காக மாவட்டம் தோறும் தலைமைக் கழகத்தால் மறுசீரமைப்பு பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். சிவகங்கை மாவட்டத்திற்கு முன்னாள் எம்.எல்.ஏ. தங்கப்பாண்டியன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர்கள் இளையராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் முதற்கட்டமாக சட்டமன்றத் தொகுதி அளவில் நடைபெற்ற கூட்டங்களில் பங்கேற்று ஒன்றிய நகர பேரூர் கழகங்களில் மேற்கொள்ள வேண்டிய மறுசீரமைப்பு குறித்து விளக்கி கூறினார்கள். தொடர்ந்து கடந்த 14ம்தேதி முதல் 17ம்தேதி வரை ஒன்றிய, நகர், பேரூர் கழகங்களின் நிர்வாகிகள் பங்கேற்று கூட்டத்தில் கலந்து கொண்டனர். அவர்களிடம் வார்டு மறுசீரமைப்பு குறித்த படிவங்களை வழங்கினார்கள். அதன்படி சிவகங்கை மாவட்டத்திற்கு முன்னாள் எம்.எல்.ஏ .தங்கபாண்டியன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் இளையராஜா ஆகியோர் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டிய தன் அவசியத்தை விளக்கமாக கூறினார்கள். கடந்த நான்கு தினங்களாக சிவகங்கை மாவட்டத்தில் உள்ள சிங்கம்புணரி வடக்கு, தெற்கு, எஸ்.புதூர் பாரி வள்ளல் ஒன்றியம், திருப்பத்தூர் வடக்கு, தெற்கு, கல்லல் கிழக்கு,மேற்கு, சாக்கோட்டை கிழக்கு ,மேற்கு, தேவகோட்டை வடக்கு, தெற்கு ,கண்ணங்குடிஒன்றியம், காளையார்கோவில் கிழக்கு, தெற்கு, வடக்கு, இளையான்குடி கிழக்கு, வடக்கு, மேற்கு, தெற்கு, சிவகங்கை தெற்கு, வடக்கு, மேற்கு, மானாமதுரை கிழக்கு, மேற்கு, திருப்புவனம் கிழக்கு, மேற்கு மற்றும் சிவகங்கை மானாமதுரை தேவகோட்டை ஆகிய நகரங்கள், காரைக்குடி மாநகராட்சி, பேரூர் கழகங்களில் சிங்கம்புணரி, திருப்பத்தூர், நெற்குப்பை, கோட்டையூர், கண்டனூர், பள்ளத்தூர், கானாடுகாத்தான், இளையான்குடி, திருப்புவனம், நாட்டரசன் கோட்டை, புதுவயல் உட்பட ஒன்றிய, நகர், பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் தொகுதியில் மறுசீரமைப்பு குறித்த ஆலோசனை நடத்தினார்கள். ஒன்றிய, நகர், பேரூர் செயலாளர்களிடம் வார்டுகள் பிரிப்பது வார்டுகளை சேர்ப்பது குறித்த விவரங்களை கேட்டறிந்தார்கள். அதற்குரிய விண்ணப்பப் படிவங்களை வழங்கினார்கள். ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் கூறிய கருத்துகளை மாநில தலைமைக்கு தெரிவித்து அதன்பின் முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்தார்கள். இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை தாங்கினார். மாநில இலக்கிய அணி புரவலர் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், தொகுதி மறு சீரமைப்பு மாவட்ட பார்வையாளர்கள் முன்னாள் எம்.எல்.ஏ. தங்கப்பாண்டியன், மாநில இலக்கிய அணி துணை அமைப்பாளர் இளையராஜா, புதுக்கோட்டை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் க.சண்முகம் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் திருமதி தமிழரசி ரவிக்குமார், மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் சுப.மதியரசன், எஸ்.மாரியப்பன் கென்னடி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் அம்பலமுத்து, எம்.சோமசுந்தரம், ஜெ.மதார்சேட், ஒன்றியச் செயலாளர்கள் பூமணி, கே.பாலசுப்பிரமணியன், பி.செல்வராஜ், எஸ்.சண்முகவடிவேல், வடிவேல், விராமதி மாணிக்கம், குன்னக்குடி சுப்பிரமணியன், நா.நெடுஞ்செழியன், சுப. சின்னதுரை, நாகனி ரவி, வழக்கறிஞர் வே.பூபால சிங்கம், லெ.மு.ரவிச்சந்திரன் ஆர்.எம்.கென்னடி, வே.ஆரோக்கிய சாமி யோக. கிருஷ்ணகுமார், வே.தமிழ்மாறன் ஆறு.செல்வராஜன், கா.வெங்கட்ராமன், மா.அண்ணாதுரை, துரை. ராஜாமணி, எம்.ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், பெ.மந்த காளை, எம்.ஏ.கடம்பசாமி, திருமதி வசந்தி சேங்கைமாறன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் சிவபுரிசேகர், எஸ்.முத்துக்குமார் நகர் கழகச் செயலாளர்கள் பெரி.பாலா, க.பொன்னுச்சாமி, காரைக்குடி மாநகரச் செயலாளர் நா.குணசேகரன், பேரூர் கழகச் செயலாளர்கள் கதிர்வேல், கே.பி.எஸ். பழனியப்பன், ராசு, அசோக், பி.ஏ.நஜ்முதீன் நாகூர் கனி, ஜெயராமன், பகுருதீன் அலிமுகமது, பிரம்மையா மற்றும் அந்தந்த ஊராட்சி ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம், மருதூர் சாலாமேடு ஏரி பகுதியில் குப்பைகள் கொட்டுவதை உடனடியாகத் தடுக்க வேண்டும் எனவும், கொட்டிய குப்பைகளை உடனடியாக அகற்ற வேண்டும், மேலும் குப்பைகள் தொடர்ந்து கொட்டாதவாறு விளம்பர பலகை வைக்க வேண்டும் எனவும் நகராட்சி அதிகாரிகளை வலியுறுத்தினார். உடன் விழுப்புரம் கிழக்கு நகர கழக பொறுப்பாளர் எஸ்.வெற்றிவேல், கோலியனூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் பி.தெய்வசிகாமணி மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர்.



வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ள நிலையில் தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், பேரிலோவன்பட்டி கிராமத்தில் நேற்றைய தினம் பெய்த தொடர் மழையின் காரணமாக கிராம குடிநீர் குளத்தின் அருகே நூற்றாண்டுக்கு முன்பாக நடப்பட்ட மிகப்பெரிய புளியமரம் வேரோடு சாய்ந்து நீர் வரத்து கால்வாயில் கிடப்பதை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி. மார்க்கண்டேயன் ஆய்வு மேற்கொண்டு உடனடியாக மரத்தை அப்புறப்படுத்த துறை சார்ந்த அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.